
எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 08 செவ்வாய்க்கிழமை மே 09 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## தேர்தலுக்குத் தயாராகுங்கள்

### ரணில் அறிவிப்பு



தேர்தல்களுக்கு ஆயத்த மாகுமாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்க ளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

"ஐக்கிய தேசியக் கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் தேர்தல் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். கட்சியை நவீன மயப்படுத்தவும், கட்சிக்குள் இளைஞர்களுக்கு முக்கிய பொறுப்புக்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி எந்தவொரு கூட்டணியுடனும் இணைந்து கொள்ளாது தனித்தே தேர்தல்களில் போட்டியிடும்" எனவும் அவர் தெரிவித்தார். (ஊ)

## முற்றுகைக்குள் மாகாண சபை

### புறமுதுகு காட்டினார் முதலமைச்சர்!





யாழ்ப்பாணத்தில் கடந்த இரண்டு மாதங்களாக போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வேலையற்ற பட்டதாரிகள் இன்று வடமாகாண சபையை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். இதனால் முதலமைச்சர் உள்ளிட்ட 9 மாகாண சபை உறுப்பினர்கள் மாகாணசபை அமர்வுகளில் பங்கேற்க முடியாமல் திரும்பிச் சென்றனர்.

காலை 9 மணியளவில் வடமாகாண சபைக் கட்டடத்துக்கு முன்னால் குழுமிய வேலையற்ற பட்டதாரிகள், வாசல் கதவை வழி மறித்து போராட்டத்தில் குதித்தனர். எனினும் அவர்கள் மாகாணசபைக்கு வரும் முன்னரே பல மாகாணசபை உறுப்பினர்கள் உள்ளே சென்றுவிட்டதால் வடக்கு மாகாண சபையின் 92 ஆவது அமர்வு நடைபெற்றது.

இந்த நிலையில் மாகாணசபை அமர்வில் கலந்துகொள்ள முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் வந்தபோது, அவரை உள்ளே விடாமல் வேலையற்ற பட்டதாரிகள் தடுத்தனர்.

"கடந்த பெப்ரவரி 27ஆம் திகதி முதல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள

04

## 'குடிமகன்களுக்கு' வாய்ப்பூட்டு



வெசாக் பண்டிகையை முன்னிட்டு நாளையும், நாளை மறுதினமும் மதுக்கடைகள் மூடப்படும் என மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.இந்த இரண்டு தினங்களிலும் மதுக்கடைகளை திறப்போருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வெசாக் பண்டிகையை முன்னிட்டு மதுக்கடைகள் மூடுவது குறித்து அரசாங்கம் எவ்வித அறிவித்தலையும் கடந்த 7ஆம் திகதி வரை விடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## விமலுக்கு விசர்

"வெசாக்தினத்தில் மஞ்சள்கொடியை அகற்றி கறுப்புக்கொடி தூக்குமாறு விமல் தெரிவித்துள்ளார். இதன் மூலம் விமல் வீரவன்ச பௌத்த தர்மத்தை இழிவுபடுத்தியுள்ளார். அவரிற்கு புத்தி பேதலித்து விசர் பிடித்துவிட்டது. எனவேதான் இவ்வாறு அவர் கூறுகின்றார்" என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் ஸாலி தெரிவித்தார்.

### சாதாரணதர மாணவருக்கு

## அடையாள அட்டைகள்



கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக் கான தேசிய அடையாள அட்டை தற் போது வழங்கப்பட்டு வருவதாக ஆட்பதி வுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக்க தெரிவித்துள்ளார்.

இது வரையில் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்காத மாணவர்கள் தமது விண்ணப்பங்களை கூடிய விரைவில் அனுப்பி வைக்குமாறு அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளதாக வும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

## பெண்ணின் சடலம் மீட்பு

கொட்டாஞ்சேனையில் உள்ள வீடொன்றில் இருந்து பெண் ஒருவரின் சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் அவசரப் பிரிவுக்குக் கிடைத்த தொலைபேசி அழைப்பையடுத்து இந்தச்சடலம் கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். அதே வீட்டில் வசித்து வந்த 39 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

## தென்மராட்சி வர்த்தகர்களுக்கு விடுமுறை

சித்திரைப் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரில் சகல வர்த்தக நிலையங்களும் திறக்கப்படமாட்டாது என சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற செயலாளர் கலாநிதி வைத்திலிங்கம் சிவராசா தெரிவித்துள்ளார். கடந்த வாரம் வர்த்தகர்களிடம் மேற்கொண்ட கலந்துரையாடலில் அடிப்படையில் தென்மராட்சியில் சித்திரைப் பௌர்ணமி தினத்தன்று தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

## 'தமிழரின் உடலில் ஆமியின் ரத்தமாம்'

### ஆளுநரின் அபூர்வ கண்டுபிடிப்பு



வடக்கில் அதிகளவான மக்களின் உடம்பில் ஓடுவது படைவீரர்களின் இரத்தமாகும் என வட மாகாண முதலமைச்சர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார். யுத்தம் காரணமாக நாட்டுக்காக இரத்தம் சிந்திய படைவீரர்கள் இன்று, வடக்கு மக்களை வாழ வைப்பதற்காக இரத்தத்தை தானமாக வழங்குகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தில் நடைபெற்ற படைவீரர் நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். ஓர் இனம், ஓர் மதம் அல்லது சமூகத்தின் வெற்றியாக இந்த நிகழ்வு நடைபெறவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வட்டமிட்ட வானூர்திகள்



### கொழும்பில் பரபரப்பு

இலங்கைக்கு வரும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக நேற்று இலங்கை வந்திருந்த நான்கு சிறப்பு உலங்கு வானூர்திகள் கொழும்பு வான்பரப்பில் வட்டமிட்டதாகத் தெரிய வருகின்றது.

இந்தியப்பிரதமரின் பாதுகாப்பு அணியில் உள்ள நான்கு எம்.ஐ-17 சிறப்பு உலங்கு வானூர்திகளே நேற்று புதுடெல்லியில் இருந்து கொழும்பு வந்துள்ளன. இதனால் சிறிதுநேரம் கொழும்பில் பரபரப்பு ஏற்பட்டது.

### மோடி சென்ற பின்னே

## அமைச்சரவை மாற்றம்

இந்திப் பிரதமர் நரேந்திர மோடியின் பயணத்தின் பின்னர் இலங்கை அமைச்சரவை மாற்றிய மைக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னதாக வெசாக் தினத்தன்று அமைச்சரவை மாற்றம் நிகழும் என ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

எனினும் அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்தும் போது, மோடியை வரவேற்கும் நிகழ்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ள அமைச்சர்களிலும் மாற்றங்கள் நடந்தால், அந்த ஏற்பாடுகள் யாவுமே குழம்பிப் போய்விடும். ஆகையால், அமைச்சரவை மாற்றத்தை ஒருவாரத்துக்கு தள்ளிவைப்பதற்கு ஜனாதிபதியும் பிரதமரும் இணக்கம் தெரிவித்துள்ளதாக அறியமுடிகிறது. சில கொழும்பு ஊடகங்களில் அமைச்சரவை இன்று கலைக்கப்படலாம் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன. (உ)

## குப்பை யாழ்ப்பாணம்

### தொடர் நடவடிக்கை என்கிறார் ஆணையாளர்



யாழ்ப்பாணம் நாகவிகாரைக்கு அண்மையிலுள்ள விடுதிக்கு அருகாமையில் பெருமளவான குப்பைகள் காணப்பட்டதை நேரில் பார்வையிட்ட வடக்குமாகாண ஆளுநர் யாழ்.மாநகரசபையின் அசமந்தப் போக்குக் குறித்து கருத்துத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் மாநகர சபைப் பிரதேசத்தில் பல்வேறு இடங்களில் பெருமளவான குப்பைகள் காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல திரையரங்கு ஒன்றிக்கு அருகிலுள்ள தனியார் காணி ஒன்றிலும் இவ்வாறு

04

எதிரொலி Ethiroli

விரைவில் அதிக பக்கங்களுடன் உங்கள் கைகளில்..



# சீனா மீது திடீர் தாக்குதல்

சீனா மீது அணு ஆயுதத் தாக்குதலை நடத்தி வட கொரியாவுடனான போர் பதற்றத்தை திசை திருப்ப அமெரிக்கா முனையக்கூடும் என பரபரப்புத் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார் சர்வதேச பிரச்சினை விடயங்கள் குறித்து ஆய்வு செய்யும் நிபுணர் ஜேம்ஸ் பீற்றர்ஸ்.

வட கொரியா சில தினங்களுக்கு முன்னர் தங்களை எதிர்க்கும் அமெரிக்காவின் வெள்ளை மாளிகையைத் தகர்ப்போம் என எச்சரிக்கை விடுத்திருந்தது. இதற்கு அமெரிக்கா பதிலடி கொடுக்கும் என எதிர்பார்த்திருந்த நிலையில், சீனா மீது தாக்குதல் நடத்தவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. (ஒ)



## தென்சூடான் யுத்தத்தால்

# உணவின்றி வாடும் சிறுவர்கள்

தென் சூடான் யுத்தம் காரணமாக 20 இலட்சம் சிறுவர்கள் இடம்பெயர்ந்துள்ளர் என ஐக்கிய நாடுகள் சபை குற்றஞ்சாட்டியுள்ளது.

அங்கு நிலவும் சிவில் யுத்தம் காரணமாக 20 இலட்சம் சிறுவர்கள் சிறுமியர் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர் எனவும் பெருந்தொகையான சிறுவர் சிறுமியர் உணவின்றி பட்டினியால் வாடி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, தென் சூடானில் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், 35 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அத்துடன் சுமார் ஒரு இலட்சம் பேர் பட்டினியால் வாடி வருகின்றனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஒ)

# தினகரன் கும்பல் நீதிபதிக்கு மிரட்டல்



டி.டி.வி.தினகரனின் இடைத்தரகர் சுகேஷ் சந்திரசேகர் உள்ளிட்டோர் மீதான வழக்கை விசாரித்து வரும் டில்லி நீதிமன்ற நீதிபதிக்கு தொலைபேசி மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சசிகலா - பன்னீர் அணியினரிடையே ஏற்பட்ட இரட்டை இலைச் சின்னத்துக்கான போட்டியில், தேர்தல் ஆணையருக்கு இடைத்தரகர் சுகேஷ் சந்திரசேகர் என்பவர் மூலமாக ரூ.50 கோடி லஞ்சம் கொடுக்க முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில் அ.தி.மு.க. துணை பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டு திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)


# தொடர்ந்து முதலிடம்

உலக டென்னிஸ் தரவரிசையில் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் தொடர்ந்தும் முதலிடத்தைத் தக்கவைத்துக்கொண்டுள்ளார் அன்டி முரே.

இந்தத் தரவரிசையில் செர்பியாவின் ஜோகோவிச் 2ஆவது இடத்தில் உள்ளார். சுவிட்ஸர்லாந்தின் வாவ்ரிங்கா 3ஆவது இடத்திலும், சுவிட்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர் 4ஆவது இடத்திலும், ஸ்பெயினின் நடால் 5ஆவது இடத்திலும் உள்ளனர்.

ரயோனிக் (கனடா), மரின் சிலிக் (குரோஷியா), கெய் நிஷிகோரி (ஜப்பான்), டொமினிக் தீம் (அவுஸ்திரேலியா), டேவிட் கோபின் (பெல்ஜியம்) ஆகியோர் முறையே 6 தொடக்கம் 10 வரையான இடங்களில் உள்ளனர்.

பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் முதலிடத்தில் உள்ளார். ஏஞ்சலிக் கெர்பர் 2ஆவது இடத்திலும், கரோலினா ப்ளிஸ்கோவா 3ஆவது இடத்திலும் உள்ளனர். (ஐ)



# தென்கொரிய புதிய ஜனாதிபதி யார்?



தென் கொரியாவில் ஜனாதிபதியாக இருந்த பார்க் கியூன்-ஹை ஊழல் குற்றச்சாட்டுக் காரணமாக தனது பதவியிலிருந்து விலகினார்.

இந்நிலையில் இன்று அங்கு புதிய ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் இன்று நடைபெறுகிறது.

அமெரிக்கா - வடகொரியா இடையே போர் பதற்றம் நிலவும் பரபரப்பான சூழலில் நடைபெறும் இந்தத் தேர்தலில் மூன் ஜே-இன் மற்றும் அன்-சீயோல்-சூ களத்தில் உள்ளனர். (ஒ)



# மக்ரோனை சந்திக்கும் டிரம்ப்

பிரான்ஸின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள இமானுவேல் மக்ரோன் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் இடையே எதிர்வரும் 25ஆம் திகதி சந்திப்பொன்று நடைபெறவுள்ளது. இதனை வெள்ளைமாளிகை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பு பிரசெல்ஸ் நகரில் நடைபெறும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

# தள்ளாடும் வயதிலும் தளராத ராணி



பிரிட்டன் ராணி எலிசபெத், விண்ட்சர் பார்க் தேவாலயத்திலிருந்து, தனது ஜாக்குவர் காரை தானே ஓட்டி அரண்மனைக்குச் சென்றடைந்த வீடியோ மற்றும் புகைப்படங்கள் சமூகவலைதளங்களில் வைரலாகியுள்ளன.

இளவரசர் பிலிப்பை பொதுச்சேவையிலிருந்து விடுவிப்பதாக, பக்கிங்ஹாம் அரண்மனை சமீபத்தில் அதிகாரபூர்வமாக அறிவித்தது. இருந்தபோதிலும், ராணி எலிசபெத் தனது பணிகளைத் தொடர்வார் என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் ஞாயிறு பிரார்த்தனைக்காக தேவாலயத்துக்குச் சென்ற ராணி எலிசபெத், சாரதி இல்லாத காரணத்தினால் காரைத் தானே ஓட்டிச்சென்றார்.

91 வயதான ராணி எலிசபெத், பிரிட்டனில் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல் வாகனம் ஓட்டுவதற்கான அனுமதி பெற்ற ஒரே நபர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## ஐ.பி.எல். அணிகளின் நிலை (இன்று வரை)

| அணி | போ | வெ | தோ | ச | மு.அ | பு |
|---|---|---|---|---|---|---|
| மும்பை | 12 | 9 | 3 | 0 | 0 | 18 |
| கொல்கத்தா | 12 | 8 | 4 | 0 | 0 | 16 |
| புனே | 12 | 8 | 4 | 0 | 0 | 16 |
| ஹைதராபாத் | 13 | 7 | 5 | 0 | 1 | 15 |
| பஞ்சாப் | 11 | 5 | 6 | 0 | 0 | 10 |
| குஜராத் | 12 | 4 | 8 | 0 | 0 | 8 |
| டில்லி | 11 | 4 | 7 | 0 | 0 | 8 |
| பெங்களூர் | 13 | 2 | 10 | 0 | 1 | 5 |

குறிப்பு: போ : போட்டி, வெ : வெற்றி, தோ : தோல்வி, ச : சமன், மு.அ. : முடிவற்றது, பு : புள்ளி

**ஐ.பி.எல். நேற்றைய ஆட்ட முடிவு**

ஹைதராபாத் 7 விக்கெட்டுகளால் வெற்றி

மும்பை 138/7 (20) - ஹைதராபாத்: 140/3 (18.2)

# எவரெஸ்டில் ஏறியவருக்கு அபராதம்


அனுமதி பெறாமல் தனியாக எவரெஸ்ட் சிகரம் ஏற முயன்ற தென்னாபிரிக்காவைச் சேர்ந்த ஒருவருக்கு 15 இலட்சம் ரூபா அபராதம் விதித்துள்ளதுடன் சட்ட நடவடிக்கையையும் எடுத்துள்ளது நேபாள அரசு.

குறித்த நபர் முதல் முகாமிலிருந்து 6400 மீற்றர் உயரத்தில் உள்ள 2ஆவது முகாமுக்கு ஏறிக்கொண்டிருந்தபோதே அவரை அதிகாரிகள் தடுத்து நிறுத்தினர்.

# சீனாவிலும் வசூல் ஆரம்பம்

சமீபத்தில் வெளியாகி பல்வேறு சாதனைகளைப் படைத்து வரும் பாகுபலி-2 படத்திற்கு நிகராக, அமீர்கான் நடிப்பில் கடந்த ஆண்டு வெளியாகியிருந்தது தங்கல். இப்படம் தற்போது சீனாவில் வெளியாகி பெரும் வசூலை அள்ளிவருகிறது.

வெளியான 4 நாட்களில் சீனாவில் ரூ.90.60 கோடியை வசூல் செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. இதையடுத்து இப்படத்தின் மொத்த வசூல் ரூ.803 கோடியாக உயர்ந்துள்ளது. தற்போது இந்தப் படம் இந்தியத் திரைப்பட வரலாற்றில் அதிக வசூல் செய்த படங்களில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. (ஒ)






# 100 பேருக்கு 135.7 தொலைபேசிகள்

இலங்கையில் ஒவ்வொரு 100 பேருக்கும் 135.7 தொலை பேசிகள் பயன்பாட்டில் இருப்பதாக, இலங்கை மத்திய வங்கியின் 67 ஆவது ஆண்டு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதன்படி, ஒவ்வொரு 100 பேருக்கும் 12 தரைவழித் தொலை பேசிகள் பயன்பாட்டின் இருக்கின்றன. கைபேசிகளையும் சேர்த்துக் கொள்ளும் போது, ஒவ்வொரு 100 பேருக்கு 135.7 தொலைபேசிகள் இருக்கின்றன. அதேவேளை, இலங்கையின் சனத்தொகையில் 23.2 வீதமானோர் இணையத்தைப் பயன் படுத்துகின்றனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இன்றைய கருத்தோவியம்



நன்றி - அத தெரண

## கற்கோவளத்தில் காத்தவராயன்

பருத்தித்துறை கற்கோ வளம் அருள்மிகு கும்பி மணல் முத்துமாரி அம் பாள் ஆலய வருடாந்த சித்திரா பௌர்ணமி பொங் கல் விழாவின் இறுதி நிகழ்வு நாளை இடம்பெறவுள்ளது. அதிகாலை 4 மணிக்கு அபிஷேகத்தைத் தொடர்ந்து பொங்கல் நிகழ்வு இடம்பெறும். மாலை 3 மணிக்கு விசே பூசையுடன் அம்பாள் வீதியுல வருவார். இரவு நிகழ்வாக காத்தவ ராயன் சிந்துநடை கூத்து நடைபெறவுள்ளது.

## அதிகாலையில் சூடு; ஒருவர் பலி

களுத்துறையில் இன்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தில் 24 வயதான இளை ஞர் ஒருவர் பலியானார்.
இந்த சம்பவத்தில் காயமடைந்த மேலும் இரண்டு பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்ட போதிலும், எவரும் இன்னும் கைதாகவில்லை என பொலி ஸார் தெரிவித்தனர்.

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம்

மே 12 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை தமிழினப் படுகொலை வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது என, வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.
அவ்வகையில் செம்மணிப் பகுதியில் 12 ஆம் திகதி யும் கிழக்கு மாகாணத்தில் 13 ஆம் திகதியும் நவாலி சென் பீற்றர்ஸ் ஆலயத்தில் 14 ஆம் திகதியும் சுடரேற்றப்படும். இதேவேளை, குமுதினி படகுப் படுகொலை நினைவாக 15ஆம் திகதி நெடுந்தீவிலும் 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் வவுனியா, கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களில் நினைவேந்தப்படும். இறுதியாக மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்படும் என்றார்.



## தண்ணீர் மோசடி

### முன்னாள் அமைச்சருக்கு அபராதம்

தென் மாகாணத்தைச் சேர்ந்த, அமைச்சரவை அந்தஸ்துள்ள முன்னாள் அமைச்சருக்கு கடந்த 20 வருடங்களாக தனது வீடு மற்றும் அலு வலகத்துக்கு மோசடியான முறையில் நீரைப் பெற்றுக்கொண்ட குற்றத்திற்காக ஒன்றரை இலட்சம் ரூபாய் அபரா தம் விதிக்கப்பட்டுள்ள தாக, திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி யொரு வர் தெரிவித்துள்ளார். முறைப்பாடு ஒன்றின் அடிப் படையில் மேற்கொள்ளப் பட்ட சுற்றிவளைப்பின் போது இந்த சொகுசு வீட் டில் முன்னாள் அமைச்ச ரின் மகனான மாகாண சபை உறுப்பினர்ஒருவர்தற்போது வசிப்பது கண்டறியப்பட் டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஊ)

## கீதாவின் கதிரை காலி



கீதா குமாரசிங்கவின் நாடா ளுமன்ற உறுப்பினர் ஆச னம், காலியாகிவிட்டதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் அறிவித்துள்ளார். இரட்டைக் குடியுரிமை வைத்திருந் ததால் கீதா நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதற் குத் தகுதியற்றவர் என மேன் முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது. இதனையடுத்தோ கீதா வின் பதவி காலியானதாக நாடாளுமன்றச் செயலாளர் அறிவித்துள்ளார். கீதா குமாரசிங்க, மகிந்த அணி யின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## தமிழ்க் கல்வி அமைச்சராக ராமேஸ்வரன் பதவியேற்பு



மத்திய மாகாண தமிழ்க்கல்வி அமைச்சராக மருதபாண்டி ராமேஸ்வரன் நேற்று கண்டி ஆளுநர் அலுவலகத்தில் சத் திய பிரமாணம் செய்து கொண்டார். இதன்போது மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவும் உடனி ருந்தார். நீண்டகாலமாக மத்திய மாகாணத்தில் தமிழ்க் கல்வி அமைச்சர் பதவிக்கு எவரும் நியமிக்கப்படா மலிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

### படையினருக்கு எதிராக சாட்சி:

## அதிகாரிக்கு உயர்பதவி

இலங்கை இராணுவத்தின் போர்க்குற்றங்கள் பற்றி அமெரிக்காவில் சாட்சியமளித்த முன்னாள் இராணுவ உயர் அதிகாரி ஒருவருக்கு உயர் பதவி வழங்கப்பட்டுள்ளமை அரசியல் வட்டாரங்களில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு பதவி வழங்கப்பட்டவர் தென் மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் கடந்த தேர்தலில் தோல்வியடைந்த அமைச்சர் ஒருவரின் நெருங்கிய உறவினர் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கைப் படையினருக்கு எதிராக சத்தியக்கடதாசி ஒன்றின் மூலம் சாட்சியமளித்த இந்த முன்னாள் அதிகாரிக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல், ராஜதந்திரப் பதவி ஒன்றை வழங்கிய விடயம் படைத்தரப்பினரிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஆ)

## அடுத்த சுற்றில் மத்தி, இந்து இளைஞர்

நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் கரப்பந்தாட் டச் சுற்றுத்தொடரில் நேற்றிரவு நடைபெற்ற "ஏ" பிரிவு அணிகளுக் கிடையி லான போட்டி களில் ஆவ ரங்கால் மத்தி மற்றும் ஆவரங்கால் இந்து இளை ஞர் அணிகள் வெற்றி பெற்றுள்ளன. ஆவரங்கால் மத்தி அணி, அச்சுவேலி ஸ்டார் அணியை 25:13, 25:21 என்ற புள்ளிகளடிப்படை யிலும், ஆவரங்கால் இந்து இளைஞர் அணி, அச்சு வேலி யூத் அணியை 25:14, 25:13 என்ற புள்ளி அடிப் படையில் வெற்றி கொண்டு முன்னேறின. (ஐ-23)



நேற்றுக் காலமான மஹிந்தவின் சகோதரியான காந்தினி ராஜபக்ச ரணவக்கவின் பூதவுடல் அவரது வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. மகிந்த ராஜபக்ச, கோத்தபாய, சமல் ராஜபக்ச உள்ளிட்ட பலர் அவருக்கு அஞ்சலி செலுத்தினர். காந்தினி ராஜபக்சவின் இறுதிச்சடங்கு இன்றைய தினம் மாலை 4.30 மணியளவில் உடஹமுல்ல பொது மயானத்தில் நடைபெறவுள்ளது. (அ)

## காட்டிக் கொடுக்கிறார்கள்

### ரிசாட் வேதனை



அரசின் பலமின்றி மறிச்சிக்கட்டி பிரதேசத்தில் மீள்குடி யேற்றத்தை ஆரம்பித்து, அப்பிரதேசத்தை அழகு படுத்த தாம் மேற்கொண்ட முயற்சிகளை இனவாதிகளுக்கு காட்டிக்கொடுத்தவர்கள் தொடர்பாக வேதனையடைவ தாக அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.
"வில்பத்தை அழிக்கின்றார்கள் என்ற கருப்பொருளை அவர் களுக்கு வழங்கி சிலர் மீள்குடியேற்றத்துக்கு தடையாக இருந்தனர். எனினும் கடந்த 43 நாட்களாக போராட்டம் நடத்திய தியாகிகளும் இங்கு இருக்கிறார்கள்" என்றார் அவர். (உ-02)

2 மணி நேரத்தில்
500/=
சம்பாதிக்க வேண்டுமா?
தொடர்புக்கு
021 300 4848

## நாளை நாளும் கோளும்

10.05.2017 புதன்கிழமை ஏவிளம்பி வருடம் சித்திரை மாதம் 27ஆம் நாள்.
பூரணை பி.இ. 03.15 வரை | சுவாதி பி.ப. 02.50வரை சித்தம் | சித்திராப்பூரணை விரதம் | வெசாக் முழுநோன்மதி
இராகுகாலம் 11.54-01.24 | சுபநேரம் 04.24-05.54 | எமகண்டம் 07.24-08.54

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆர்வம் | அசதி | பாராட்டு | நட்பு | வெற்றி | நிம்மதி | சோதனை | ஆக்கம் | நலம் | சிந்தனை | பரிசு | அச்சம் |

# சிறுவனைக் கடத்தியது "ராசீக்" கும்பலே!

கம்பளையில் கடந்த வாரம் 2 வயதுச் சிறுவனைக் கடத்திய வழக்கில் கைதுசெய்யப்பட்ட நான்கு பேரை விளக்க மறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதி மன்ற நீதிவான் எம். கணேசராஜா உத்தர விட்டுள்ளார்.

இந்தச் சந்தேக நபர்களில் இரு வர் "ராசீக்" குழுவைச் சேர்ந்தவர்கள் எனவும், இவர்கள் கடந்த காலங்களில் இடம்பெற்ற, பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புள்ளவர்கள் எனவும் காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித் தனர். (ஆ)

## வவுனியாவில் பௌர்ணமி விழா

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டமும், வவுனியா ஆங்கில சங்கமும் இணைந்து நடத்தும், 198 ஆவது முழுநிலாக் கருத்தாடல் நிகழ்வு நாளை 10.05.2017 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க, கலாசார மண்டபத்தில் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசனின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் இலங்கையை சைக்கிளில் சுற்றிவந்த த.பிரதாபன் கௌரவிக் கப்படவுள்ளார். (ஆ)

# அந்த நாள் ஞாபகம்.....!



**09.05.1945**

இரண்டாம் உலகப்போர் ஐரோப்பாவில் இதேநாளில் தான் முடிவுக்கு வந்தது. பெர்லின்,யூகொஸ்லாவியா போன்ற இடங்களில் நிலைகொண்டிருந்த ஜெர்மன் படைகள் சோவியத் தளபதி கியோர்கி சூக்கொவ் இடம் சரணடைந்தமை, ஜெர்மனிய இராணுவத் தளபதி ஹேர்மன் கோரிங் அமெரிக்க இராணுவத்தால் பிடிக்கப்பட் டமை,நோர்வேயின் அதிபராக இருந்த விட்குன் உயிஸ்லிங் நோர்வேயில் கைது செய்யப்பட்டமை, சோவியத் இராணுவம் பிராக் நகரை அடைந்தமை, கால்வாய் தீவுகள் பிரித்தானியரால் விடுவிக்கப்பட்டமை போன்ற பல திருப்பங்கள் அரங்கேறின.

# இன்றைய தேர்த்திருவிழாக் காட்சிகள் சில..



துவாளி கண்ணகை அம்மன் ஆலயம்.



மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலயம். (உ-06)



வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயம்



நீர்வேலி கந்தசுவாமி கோயில்

# இறுதிக்குள் நுழைந்தது றோயல்



வட மாகாண ரீதியில் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் "வடக்கின் வல்லரசன்" உதைபந்தாட்ட தொடரில் நேற்று நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் வெற்றிபெற்றது.

இந்த அரையிறுதியாட் டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆடிய ஊரெழு றோயல், கடும் போராட் டத்துக்கு மத்தியில் 4:3 என்ற கோல் அடிப்படை யில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. றோயல் அணியின் கஜகோபன் 3 கோல்களைப் போட நிதர்சன் ஒரு கோலைப் போட்டார். (ஐ-5)

# விட்டுப் பிடித்த மன்னார் ஐக்கியம்



குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற "பிளே ஒவ்' சுற்றில், அரையிறுதி அணியைத் தெரிவு செய்யும் போட்டி ஒன்றில் இளவாலை யங்ஹென்றிஸ் மற்றும் மன்னார் ஜோசப்வாஸ் ஐக்கிய அணிகள் மோதின.

முதல் பாதியில் அசத்தலாக ஆடிய யங் ஹென்றிஸ் அணி 2:0 என்ற கோல்கள் அடிப்படையில் முன்னிலை பெற்றது.

பின்னர் இரண்டாம் பாதியில் ஐக்கியத்தின் கையோங்கியது. அந்த அணி தொடர்ந்து 3 கோல்களைப் போட ஆட்ட நிறைவில் ஐக்கியம் 03:02 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஆட்டநாயகனாக அந்த அணியின் அஜித் தெரிவுசெய்யப்பட்டார். (ஐ-5)

## முற்றுகைக்குள்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமக்கு உடனடியாக இன்றே தீர்வொன்றை வடக்கு மாகாண முதலமைச்சர் வழங்க வேண்டும்" என்று போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

அதற்கு " இது மத்திய அரசாங்கத்துடன் தொடர்புடைய விடயம், அதன்படி ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிகளை நான் உங்களுக்கு வழங்கியிருக்கின்றேன். இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது மத்திய அரசாங்கமே" என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூறினார்.

எனினும் முதலமைச்சரின் இந்தக் கூற்றுக்களை ஏற்றுக் கொள்ளாத வேலையற்ற பட்டதாரிகள் முதல மைச்சரை வடமாகாண சபையின் உள்ளே செல்லவிடாது தடுத்ததால் முதலமைச்சர் திரும்பி சென்றார். அதேபோன்று அமைச்சர் ஐங்கரநேசன், வடமாகாணசபை உறுப்பினர்களான அஸ்மின், அனந்தி, விந்தன் கனகரத்தினம், ஆர்னோல்ட், ஷிராய்வா, சுகிர்தன், பதிதியூன் ஆகியோரும் பட்டதாரிகளின் போராட்டத்தால் மாகாணசபை அமர்வில் கலந்து கொள்ளாமல் திரும்பினர்.

இச்செய்தி எழுதப்ப டும் வரை வடக்கு மாகாணசபை உறுப் பினர்கள் பட்டதாரிகளின் முற்றுகைக்குள் சிக்கியிருப்பதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.(அ-4)

## யாழ்நகர்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெருமளவில் குப்பைகள் காணப்படுகின்றமை தொடர்பில் திரையரங்கிற்குச் சென்றுவரும் பொதுக்களால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் யாழ் மாநகரசபை ஆணையாளரைத் தொடர்கொண்டு கேட்டபோது, இவ்விடயம் தொடர்பில் உடனடியாக தொடர் நடவடிக்கைக்கு உத்தரவிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். தனியார் காணிகளில் காணப்படுகின்ற குப்பைகள் தொடர்பில் தமக்கு முறைப்பாடுகள் கிடைத்தால் மட்டுமே அவற்றிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவித்த ஆணையாளர் திரையரங்கிற்கு அருகிலுள்ள காணியில் காணப்படும் கழிவுகள் தொடர்பில் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

**வாசகர் கவனத்துக்கு...**

உங்கள் பிரதேச ஆலய, பாடசாலை, சன சமூக நிலைய, விளையாட்டு, நிகழ்வுகளை படங்களு டன் எமக்கு அனுப்பி வைத்தால் அன்றைய தினமே "எதிரொலி"யில் பிரசுரிப்போம். தகவல்களை ethirolimedia@gmail.com என்ற மின்னஞ்சல் முகவ ரியூடாகவோ தொலைபேசி யூடாகவே அனுப்பிவைக்க லாம்.

**செய்தியாளர்கள் தேவை**

'எதிரொலி' மாலைத் தினசரிக்கு யாழ். மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலிருந்தும் பிரதேச செய்தியாளர்கள் தேவை.

குறிப்பு: செய்திகள் மற்றும் புகைப்படங்களை உடனுக்குடன் மின்னஞ்சலில் அனுப்பக் கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

உங்கள் புகைப்படம் மற்றும் சுய விவரங்களை ethirolimedia@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 09.05.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.